பத்திரிக்கைச் செய்தி

Support Person (ஆதரவு நபர்) தேர்வு செய்து பட்டியலிட விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன

பாலியல் குற்றங்களால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு உதவி மற்றும் ஆதரவு வழங்கும் நோக்கில், பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம், 2012-ன் பிரிவு 39, போக்சோ விதிகள், 2020 மற்றும் அரசாணை (நிலை) எண்.23, நாள்: 12.08.2026 ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டுதல்களின் படி, திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் Support Person (ஆதரவு நபர்) ஆகத் தேர்வு செய்து பட்டியலிடுவதற்குத் தகுதியுடைய நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

1. கல்வித் தகுதி மற்றும் அனுபவம்

(i) Any person or an organization working in the field of child rights or child protection or

(ii) Any person with a post-graduate degree in Social Work, Sociology, Law, Psychology, Child Development, or any other relevant field related to child welfare, health, or education or a graduate with a minimum three years of experience in child education, development, health, or protection issues.

தனிநபர் Support Person க்கான குறைந்தபட்ச வயது 25 ஆண்டுகள் ஆகும். விண்ணப்பதாரர்கள் அரசாணையில் (இணைப்பு) குறிப்பிடப்பட்டுள்ள இதர தகுதிகளையும் பூர்த்தி செய்திருக்க வேண்டும்..

2. விண்ணப்பிக்கும் முறை

தகுதியும் விருப்பமும் உள்ள விண்ணப்பதாரர்கள், திருச்சிராப்பள்ளி மாவட்ட இணையதள அறிவிப்பில் இணைக்கப்பட்டுள்ள அரசாணையினையும், விண்ணப்ப படிவத்தையும் பதிவிறக்கம் செய்து அதனை உரிய முறையில் முழுமையாகப் பூர்த்தி செய்திட வேண்டும். விண்ணப்பத்துடன் கல்வித் தகுதி, பணி அனுபவம் மற்றும் இதர தகுதிகளுக்கான சான்றிதழ்களின் சுய சான்றொப்பமிட்ட நகல்கள் இணைக்கப்பட வேண்டும்.

மேலும், காவல்துறை சரிபார்ப்புச் சான்றிதழ் (Police Verification Certificate) ஏற்கனவே பெறப்பட்டிருப்பின், அதனை விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும். அவ்வாறு பெறப்படாத நிலையில், காவல்துறை சரிபார்ப்பிற்காக விண்ணப்பித்ததற்கான ஒப்புகைச் சீட்டினை (Acknowledgement Receipt) விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும்

Scanned with OKEN Scanner

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை உறையின் மீது "Application for Empanelment as Support Person – Trichy District" எனக் குறிப்பிட்டு 05.12.2026 அன்று மாலை 5.00 மணிக்குள் கீழ்க்கண்ட முகவரிக்கு நேரிலோ அல்லது அஞ்சல் மூலமாகவோ சமர்ப்பிக்க வேண்டும்.

3. **விண்ணப்பம் பரிசீலனை செய்யும் முறை**

விண்ணப்பங்கள்அரசாணை(https://drive.google.com/file/d/1qToMbymHncCYxo2QyZ64_nehlhloHWtO/view?usp=drive_link) மற்றும் அதனுடன் இணைக்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்களில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகள் மற்றும் நடைமுறைகளின்படி பரிசீலிக்கப்பட்டு, தகுதியான விண்ணப்பதாரர்கள் தேர்வு செய்து பட்டியலிடப்படுவர். **பத்திரிக்கைச் செய்தியில் குறிப்பிட்டுள்ள 05.12.2026 அன்று பிற்பகல் 5.00மணிக்கு மேல்** பெறப்படும் விண்ணப்பங்களும், முழுமையாகப் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்களும், **சுய சான்றப்பமிட்ட சான்றிதழ்கள் இணைக்கப்படாத** விண்ணப்பங்களும், எவ்வித முன் அறிவிப்பும் இன்றி தகுதி நீக்கம் செய்யப்படும். திருச்சிராப்பள்ளி மாவட்டத்தை சேர்ந்த விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். மேற்கண்ட பதவிக்கான விண்ணப்படிவத்தினை https://tiruchirappalli.nic.in/ என்ற இணையதளத்தில் இருத்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி
மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர்,
மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு,
N.E.1, முதல் தளம், மெக்டொனால்ட்ஸ் சாலை,
கலையரங்கம் வளாகம், கண்டோன்மெண்ட்,
திருச்சிராப்பள்ளி – 1.

மாவட்ட ஆட்சித்தலைவர்,
திருச்சிராப்பள்ளி.

20/11/26

Scanned with OKEN Scanner